RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22251

OPEN ACCESS

# நற்றிணையில் காணலாகும் நெய்தல் நில வழிபாடுகளும், நம்பிக்கைகளும்

**அ. தமிழரசி [அ, *], நா. தனராசன் [ஆ]**

[அ] தமிழ்த்துறை, ம.இரா.அரசினர் கலைக்கல்லூரி, மன்னார்குடி-614001, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேராவூரணி-614802, தமிழ்நாடு, இந்தியா

# Neythal Land Worship and Beliefs found in Natrinai

**A. Thamizharasi [a, *], N. Dhanarasan [b]**

[a] Department of Tamil, M.R. Government Arts College, Mannargudi-614001, Tamil Nadu, India

[b] Department of Tamil, Government College of Arts and Science, Peravurani-614802, Tamil Nadu, India

* Corresponding Author: tamilanbu51@gmail.com

Received: 28.09.2022
Revised: 10-11-2022
Accepted: 16-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Sangam literature is a mirror of the times which shows the lives of the people of the Sangam age. Among the land divisions such as Kurinji, Mullai, Marutham, Neithal, and Palai, Neithal Thinai is the sea and the land around the sea. They help us know the customs of the people of Neithal Land. We are able to understand the great labour and methods of worship of the people of the land through the Natrinai Neithal Thinai. Moreover, it is possible to know the customs of the Bharatas, the sun, the moon, nature, the wind, the rain, the trees, the fasting, and the rituals of worshipping the deity. The Etthutthokai and the Pathuppaattu songs greatly help to understand their unchanging way of life. Moreover, worship and beliefs prevail in the songs found in the Neithal Thinai. In this article, we are also amazed at the brave tide-sea journey of the people of Neithal, the devoted way of life of the woman-head of the family, and the ability to cope with the hardships caused by natural calamities. In today's time, the sea's condition is compassionate. It is not an exaggeration to say that if the songs of Natrinai Neithal Thinai are closely looked at, it is their faith and worship that give creativity and encouragement to everyone and teach them to face life with courage.

**Keywords:** Sangam literature, Natrinai, Neithal Thinai, Worship

## முன்னுரை

கற்கால மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான். இயற்கையின் மூலமாக கிடைத்த நன்மைகளைக்கண்டு மகிழ்ச்சியடைந்தான், தீமைகளைக் கண்டு பயந்தான். தீமைகள் வராமல் காக்கவும், நன்மைகள் கிடைக்கவும், இயற்கையை வழிபட தொடங்கினான். இயற்கை வழிபாடே நம்முடைய தொன்மையான வழிபாடாகும். அவற்றில் மரங்கள், கடல், சங்கு, சூரியன், சந்திரன், மலைகள், மழை இவற்றையெல்லாம் படிபடியாக வழிபடதொடங்கினான். அவற்றின் மீதும் நம்பிக்கை வைத்தான். பின்னர் கால எண்ணங்களுக்கு ஏற்ப கடவுளின் மீது நம்பிக்கைக் கொண்டு சிவன், திருமால், முருகன், வருணன், கொள்ளிபாவை, முதலிய தெய்வங்களை வழிப்பட்டனர். இவற்றினை அடிப்படையாக கொண்டு நற்றிணையில் நெய்தல் திணையில் காணப்படும் வழிபாடுகளும் நம்பிக்கைகளும் என்ற தலைப்பில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வழிபாடுகளும் நம்பிக்கைகளும்

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் வழிபாடும், நம்பிக்கையும் தங்கள் பழக்க வழக்கங்களையொட்டியே அமைந்திருந்ததையே காட்டுகிறது. தென்புலத்தார் இறந்த முன்னோர்களையும், நடுகல் தெய்வங்களையும், பேய், பூதம், முனி, கடைமுனி, மோகினி போன்றவற்றையும், தீய உயிரினங்களான பாம்பு, சுறா, முதலை ஆகியவற்றையும் இடதெய்வம், ஆற்று தெய்வம், மலை தெய்வம், காட்டு தெய்வம், வானத்திலுள்ள கதிரவன், திங்கள் ஆகியவற்றையும், குறிஞ்சி நில மக்கள் சேயோனையும், முல்லை நில மக்கள் மாயோனையும், மருத நில மக்கள் வேந்தனையும், நெய்தல் நிலத்து மக்கள் வருணனையும், பாலை நிலத்து மக்கள் காளி போன்ற தெய்வங்களை வணங்கியதையும் நமக்கு அறிய தருகின்றது.

## சூரிய வழிபாடு

இயற்கையின் முக்கிய அங்கமான ஞாயிற்றை மையமாக வைத்தே இவ்உலகம் இயங்குகிறது. தினந்தோறும் தொழில் செய்யும் மக்கள் முதல் அனைவருமே வழிபாடு செய்தே எந்தவொரு செயலையும் தொடங்குகின்றனர். அலையையுடைய கடலில் மீது தோன்றி யாவரும் வணங்கும் ஞாயிறு என்று பாடி தலைவியின் வாய்மையை கதிரவனுக்கு உவமைப்படுத்துகிறார் மதுரை மருதன் இளநாகனார்,

"முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி

ஏமுற விளங்கிய சுடரினும்" (Swaminatha Iyer, 2014)

மேலும் சூரியனை புறநானூற்றின் 59 வது பாடலில் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

"கடல் ஊர்பு எழுதரும்

ஞாயிறு அணைய"

என்று கூறி பாண்டியன் சித்திர மாடத்து துஞ்சிய நன்மாறனை பாடுவதன் மூலமும் இயற்கையை பண்டைய புலவர்கள் மேலான நிலையில் வைத்து வழிபட்டதை அறியமுடிகிறது. சங்க இலக்கியத்தில் கதிரவனை பல இடங்களில் புலவர்கள் உவமித்திருப்பதை காணமுடிகிறது.

இலங்கு கதிர் - (Balasubramaniyam, 2004)

மண்டிலம் -

பல் கதிர் ஞாயிறு பகல் ஆற்றி மலைசேர - (Nachinarkiniyar, 2007)

அகன் ஞாலம் விளங்கும் பல் கதிர் -

கடுங்கதிர் ஞாயிறு (Balasubramaniyam, 2004)

## சந்திர வழிபாடு

கடலின் மேல் திங்கள் நிறைந்து தோன்றுவதால் கடல் பொங்கியெழுவது இயல்பு இந்த நிறை நிலா காலம் மணம் கொள்ளுவதற்கு ஏற்றது என்று கூறும் தலைவி முழுமதி காலம் கற்புக்கு ஒக்குமென்றாள், இதனை ஆசிரியர் பொதும்பில் கிழார்மகன் வெண்கண்ணி நிலவினை இப்பாடலில் கற்பிற்கு இணையாக வர்ணிக்கிறார். கற்புக்கு ஏற்ற காலம் எனவும், வணங்குவதற்கு ஏற்ற காலம் எனவும் குறிப்பிடுகிறார்.

"இரவுத்தலை மண்டிலம் பெயர்ந்தென, உரவுத் திரை

எறிவன போல, வருஉம்" (Balasubramaniyam, 2004)

என்கிறார் புலவர். வெண்மையான நிலா ஒளியை கண்ணொளியால் காணும் போது பல கலைகளும் காட்டும் கதிர்களின் இடைஇடையே பாலை முகந்து வைத்தாற் போன்று குளிர்ச்சியைக் கொண்ட நிலவே, என வெள்ளைக்குடி நாகனார் நிலவினை,

"பளிங்கு செறிந் தன்ன பல்கதிர் இடைஇடை

பால் முகற் தன்ன பசுவெண் நிலவின்

மால்பு இடர் அறியா நிறையுறு மதியம்" (Balasubramaniyam, 2004)

என்று நிலவினை வணங்கத்தக்க இடத்தில் வைத்து உவமிக்கிறார்.

## கடல் வழிபாடு

உலகம் எழுபத்து ஒன்பது சதவிகிதம் நீரால் நிரம்பியது. எங்கெங்கு காணினும் கடல், ஆறுகள் போன்ற நீர் நிலைகளால் இப்பூமி சூழப்பட்டுள்ளது. இதனை அறிந்த நம் முன்னோர்கள் இயற்கையின் முக்கிய பங்கு வகிக்கும் கடலினை கடல் மாதா என்றும் பெண்ணின் பெயர்களை வைத்தும் வழிபாடு செய்து வந்தமையை சங்க காலம் தொட்டே பாட்டிலும், தொகையிலும் புலவர்கள் எடுத்தாளப்பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

"கணம் கெழு கடவுட்கு உயிர் பலி தூஉய்

பரவினம் வருகம் சென்மோ - தோழி" (Balasubramaniyam, 2004)

இப்பாடலின் ஆசிரியரான நக்கீரர் தன் நெய்தல் நிலப் பாடலில் தன்னை பிரிந்து சென்ற தலைவனின் பெரிய தோள்கள் சேராது. பசலை படர்ந்த தலைவி நாணமுற்று. தெய்வத்தை முன்னிலைப்படுத்தி தன் தலைவன் கூறிய "இனி ஒரு பொழுதேனும் இவளை பிரியேன்" என சூளுரைத்தவனை வருந்துதல் செய்யாது காப்பாயாக என்று வேண்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. மேலும்

"நெய்தல்

தண்ணரும் பைந்தார் துயல்வர அந்திக்

கடல் கெழு செல்வி கரை நின்றாங்கு

நீயே கானல் ஒழிய, யானே"

அந்தி காலத்தில் கடற்கரையில் கடல் தெய்வம் நிற்பது போல நீ கடற்கரைச்சோலையில் தனித்து நிற்க. என் அணிகலன்கலையெல்லாம் விடுத்து வெறியாட்டம் மேவியதுப்போல பொலிவான என் அழகினை துறந்து என்று, கடற்கரை தெய்வத்தினை வணங்குவதற்குரிய தெய்வம் எனக்கூறி இப்பாடலில் அம்மூவனார் சுட்டுகிறார்.

"பெருங்கடற் தெய்வம் நீர் நோக்கித் தெளித்து" (Nachinarkiniyar, 2007)

என்ற கலித்தொகை பாடலில் தலைவியிடம் கடல் தெய்வத்தின் முன்னிலையில் தலைவன் உன்னைப் பிரியேன் என்று சூளுரைக்கிறான் என்பதனை ஆசிரியர் இப்பாடலில் காட்டுவதன் மூலம் நெய்தல் நில மக்களின் முக்கிய வழிபடு தெய்வமாக கடல் காணப்படுகிறது என்பதனை அறிகிறோம்.

## வருணன் வழிபாடு

"மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" (Ilampooranar, 2018)

வருணனை நெய்தல் நில மக்கள் இல்லுறை தெய்வமாக வணங்கினர். வருணன் மேயும் உலகமாக பெருமணல் உலகத்தை தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. ஆயிரம் கண்கள் உடையவனாக நம் சமய நூல்கள் சித்தரிக்கின்றன.

பழையர், பரதவர் எனப்படும் குடிமக்கள் முத்துக்களையும் வலம்புரி சங்குகளையும் பெரிய சுறாவினுடைய முற்களையும் கடல் தெய்வத்துக்கு காணிக்கையாகக் கொடுத்து வழிப்பட்டதை தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரத்தில் யாழிசை கூட்டி கானல் வரி பாடிய மாதவி கோவலன் அல்லாத வேறொருவன் மேல் காதல் கொண்டது போல் பாடிய பாடலுக்காக கடல் தெய்வத்தை வேண்டி தன் பிழையைப் பொறுத்தருள வேண்டி பாடுகிறாள் என்பதன் மூலம் தொல்காப்பியத்திலும், சிலப்பதிகாரத்திலும் கடல் வழிபாடு இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

"கொடுஞ்சுழிப் புகா அர் தெய்வம் நோக்கி

கடுஞ்சூள் தருகுவன் நினக்கே"

தலைவி புகார் நகரத்து உறையும் தெய்வமான வருணனிடம் வேண்டி உனக்கு கடுஞ்சூள் தருவேன் என தலைவி உரைக்கிறாள் இதன் மூலம் வருண வழிபாடு புகார் நகரத்தில் மேலோங்கி இருந்தது என்பதை அகநானூற்று பாடல் எடுத்துரைக்கிறது (Mohan, 2011).

## சுறாமுள் வழிபாடு

"வெண் கூதாளத்துத் தண்பூங்கோதையர்

சினைச் சுறவின் கோடு நட்டு

மனைச் சேர்த்திய வல்லணங்கினான்

மடல் தாழை மலர் மலைந்தும்

பிணர்ப் பெண்ணைப் பிழிமாந்தியும்

புன்தலை மாமகளிரொடு

பாயிரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது

உவவு மடிந்து உண்டாடியும்"

நெய்தல் நிலத்து தெய்வமான வருணனை சிணைச் சுறாக் கொம்பினை நட்டு தங்கள் இல்லத்தில் வளம் பெருக வேண்டும் என்று ஆடியும், பாடியும் விரும்பிய உணவினை உண்டும் வருணனை வழிப்பட்டனர். அந்நிலத்திற்கே உண்டான அடிப்படையில் தாங்கள் செய்யும் தொழிலுக்கு அச்சம் ஏற்படா வகையில் தெய்வத்தினை வழிப்பட்டதாக பட்டினப்பாலை எடுத்துச் சொல்கிறது (Mohan, 2011).

## ஊழ் விணைப் பற்றிய நம்பிக்கைகள்

"யாம் செய் தொல் வினைக்கு எவன் பேதுற்றனை

வருந்தல் வாழி - தோழி"

நாம் ஒருவருக்கு தீங்கினைச் செய்தால் அது மறுபடியும் நம்மை வந்துசேரும் என்பதே ஊழ்வினை. ஊழ் பற்றிய நம்பிக்கை, விதி, தலை விதி, வினை என பலவாறு அழைக்கப்படுவதும் ஊழே. இதனை உணர்த்தும் பாடலாக இவ்வரிகள் அமையப்பெற்றுள்ளது. வள்ளுவர் வகுத்த குறளில்,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா

பிற்பகல் தாமே வரும்" (Puliyur Kesigan, 2016)

என்பதையும் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற பழமொழியினையும் ஊழ் பற்றிய செய்தியினை காணும் பொழுது தமிழர்க்கொண்டிருந்த நம்பிக்கையை இவை காட்டுகிறது. மேலும்,

"தொல் ஊழி தடுமாறு, தொகல் வேண்டும் பருவத்தால்"

உலகத்தில் உள்ள உயிரினங்கள் எல்லாம் முன்னொரு ஊழிக்காலத்தில் பிறந்தும், இறந்தும் தடுமாறி பிரியும் படியாக நான்முகன் படைத்தான். அவனே முதல்வனும் ஆவான். அந்த உயிர்கள் எல்லாம் ஊழி காலம் முடிந்த பிறகு அவற்றை தன்னிடத்தே மீண்டும் ஒடுக்கிக் கொள்வான். இவை ஊழ்வினையின் பயனாக நடைபெறுகிறது, என்று இப்பாடல் வரிகள் ஊழிக்காலத்து ஊழ்வினையை மேற்காணும் கலித்தொகை பாடல் மூலம் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். மேலும்,

"தொல்வினைப்பயன் துய்ப்பர்"

"பல்புரிந்து இயறல் உற்ற நல்வினை"

ஊழ்வினையைப் போலவே நம்முடைய முற்பிறவி மற்றும் மறுபிறவி ஆகியவற்றின் நம்பிக்கைகளை சங்க இலக்கிய நூல்களில் புலவர்கள் ஆங்காங்கே தம் பதிவுகளை வைத்துச் சென்றிருக்கின்றனர் என்பதை மேல்காணும் பாடல் வரிகளின் மூலம் அறிகிறோம்.

## முன்னோர்கள் வழிபாடு

பழங்காலம் தொட்டே அரசர்களின் நினைவிடங்களிலும் வெற்றியை குறிக்கும் நடுகல் போன்றவற்றை வழிபடும் முறை இருந்து வருகிறது. இறந்தவர்களை நினைத்து குறிப்பிட்ட நாளில் நினைவேந்தல் நிகழ்வுகளையும், அமாவாசை போன்ற தினங்களில் வழிபடும் முறையும் தமிழர்களிடையே காணப்படுவது வழக்கமாகும்.

"பச்சிறாக் கவர்ந்த பசுங்கட் காக்கை

தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்"

நற்றிணையின் இப்பாடலில் நக்கீரர் மகளிர் காகத்திற்கு ஒரு கவளம் சோற்றினை முற்றத்தில் தம் முன்னோர்களை நினைவில் வைத்து காக்கைக்கு இட்டதை அறிய தருகிறார்.

## படகு வழிபாடு

நீண்ட காலம் தன் தொழிலுக்கு உதவிய பரதவர்களின் படகுகளை இனி இவை ஓடுவதற்கு தகுதியற்றது என கைவிடுவர். அப்படகுகளை புன்னை மரத்து நிழலில் கட்டிப்போடுவர். தன் இல்லுறைத் தெய்வத்தை வணங்கும் போது நமக்கு முன்னாளில் உதவி செய்த பழைய அந்த படகுக்கும் மலர்களைத் தூவி அகில் புகையோடு தூபம் காட்டி வழிபடுவர் என்பதை,

"ஈண்டு பெருந்தெய்வத்து யாண்டுபல கழிந்தெனப்"

என்ற பாடல் மூலம் அம்மூவனார் படகு வழிபாடு முன்னோர்களிடத்தில் இருந்துள்ளதைக் காட்டுகிறார்.

## நோன்பு

முக்கல் ஆசான் நல்வெள்ளையார் என்ற புலவர் தனது நெய்தல் திணைப்பாடலில் நோன்பு நூற்று வெண்மணற்குவியலின் மேல் அமர்ந்திருக்கும் சிவந்த வாயையுடைய காக்கைக்கு சோற்றினை வைக்க அது தன் பெண் காக்கைக்கு விருப்பப்படும் அயிறை மீனையே தேடும் என்கிறார் ஆசிரியர். இதன் மூலம் தலைவி நோன்பு மேற்கொண்டதைத் தெரிந்துக்கொள்ள முடிகிறது.

“படிவ மகளிர் கொடி கொய் தழித்த”

“தைஇத் திங்கள் தண் தயம் படியும்”

## சிலம்பு கழி நோன்பு

சிலம்பு கழி நோன்பு என்பது தமிழர்களினுடைய பழங்காலத்திலிருந்த ஒரு திருமண மரபாகும். மணமகளின் காலில் அவள் பெற்றோர்கள் குறிப்பிட்ட வயதில் அணியச்செய்வர். திருமணத்திற்கு முன்பு அதனை நீக்குவதற்கு செய்யப்படும் ஒரு நோன்பு இந்த சிலம்பு கலி நோம்பாகும்.

“சிலம்பு கழிஇய செல்வம்”

இப்பாடலின் ஆசிரியர் கயமனார் உடன்போக்கு சென்ற தன் மகளின் மென்மைத் தன்மை கருதிக் கூறும்போது இந்த சிலம்பு கலி நோன்பை யான் பார்க்கவில்லை என்றும் பிறர் பார்த்தனர் என்றும் கூறும் செய்தியைக் காணமுடிகிறது.

## கடவுள் பனை மரத்தில் உறைதல்

மரங்களை தமிழர்கள் பன்னெடுங்காலமாக வணங்கி வந்தனர். வேம்பு, ஆல் அரசு, புன்னை, பனை மரங்களை வழிப்பட்டும் வந்தனர்.

“தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை

மன்றப் பெண்ணை”

ஊருக்கு நடுவில் எல்லோருக்கும் பொதுவாக இருக்கின்ற வளைந்த மடலையுடைய பனை மரம் ஒன்று இருப்பதாகவும் அந்த பனை மரத்தின் அடி பாகம் பருத்து காணப்படுவதுடன் நீண்ட நாட்களாக மரத்துள் தெய்வம் தங்கி உறைவதாகவும் தலைவி தோழிக்கு சொல்லும் பாடலில் பனை மரத்தில் தெய்வம் உறைவதை இப்பாடலின் ஆசிரியரான மதுரை ஆருலவியநாட்டு ஆலம்பேரி சாத்தனார் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

“மரத்திலே தெய்வம் இருக்கின்றது என்பதனை,

கடவுள் மரத்த முள்மிடை குடம்பைச்”

சாகலாசனார் என்ற புலவர் இப்பாடலில் கூறுகின்றார்.

## இன்றைய நெய்தல் நிலத்தில் வழிபாடுகள்

நெய்தல் நில மக்களின் வழிபாட்டு முறைகள் முற்றிலும் மாறுபட்டுள்ளது. தொடக்க காலத்தில் தங்கள் தொழிலுக்கு உதவிய பொருட்களை படகு, துடுப்பு, வலை, திசைக்காட்டும் கருவி, எறிஉளி ஆகியவற்றைச் சுத்தம் செய்து அவைகளுக்கு தூப தீப ஆராதனையை செய்கிறார்கள். பலவகையான பொருட்களை தம்முடைய வழிபாட்டில் வைத்து வழிபடுகிறார்கள். அன்றைய தினம் முழுவதும் நோன்பு இருந்து இதனை செய்கிறார்கள். தம்முடைய தொழிலான மீன் வேட்டைக்கும் செல்வதில்லை.

வேலை நாட்களில் உறுதுணையாக இருந்த கிராம தெய்வங்களையும், சிறு தெய்வ வழிபாடுகளையும் குறிப்பிட்ட நாளில் பால்குடம் எடுத்தும், தெய்வங்களின் உருவங்களைப் படைத்து

வழிபடுகின்றனர். மீன்பிடி தொழிலுக்கு உதவும் மழை, காற்று, வெள்ளம், அலைகடல் ஆகியவற்றை வழிபடவும் தவறுவதில்லை.

## முடிவுரை

கடலோடும் மீனவர்களின் வாழ்க்கை முறையை உற்றுநோக்குங்கால் அவர்களுடைய வாழ்க்கை அச்சம் நிறைந்ததாகவே காணப்படுகிறது. இருப்பினும் அவர்கள் தங்களுடைய வழிபாட்டு முறைகளை இடைவிடாமல் காத்து வருகின்றனர். இயற்கையை வழிபடும் அவர்கள் இன்றைய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வாழ்க்கை நடத்துகின்றனர். நற்றிணை நெய்தல் திணையில் காணப்படும் பரதவர்களின் சூரிய, சந்திர வழிபாட்டு முறைகளையும் கடல்தாய் வழிபாடு, வருணன் வழிபாடு, சுறாமுள் வழிபாடு மற்றும் அவர்களுடைய நம்பிக்கைகளான ஊழ்வினை முன்னோர்கள் வழிபாடு, படகு வழிபாடு, நோன்பு, பனைமர வழிபாடு ஆகியவற்றினை நற்றிணை நானூறு என்ற நூலின் அடிப்படையில் கண்டோம். அனைவரிடத்திலும் அன்பு காட்டி வாழும் வாழ்க்கை முறையும் உழைப்பின் மீது நம்பிக்கையும் கொண்ட அவர்களை நற்றிணையின் வழி அறிந்து கொண்டோம்.

## References

Balasubramaniyam, K.V. (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Ilampooranar, (2018) Tholkappiyam Poorulathikaram, Saratha Publication, Chennai, India

Mohan, R. (2011) Pathupatu Molamum Uraiyum, New Century Book House, Chennai, India

Nachinarkiniyar, (2007) Kaliththogai, Kalaga Veeliyidu, Chennai, India

Puliyur Kesigan, (2016) Thirukkural Parimelazhagar Urai, Poompuhar Pathippagam, Chennai, India.

Swaminatha Iyer, U.V., (2014) Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa, Noolaga nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License